# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXXI YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 JULY No. 07


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 3:1-8

(தாவீது தன் குமாரன் அப்சலோமுக்குத் தப்பி ஓடிப்போகையில் பாடின சங்கீதம்)

1. கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர்.
2. தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று, என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். (சேலா)
3. ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.
4. நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார். (சேலா)
5. நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக் கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார்.
6. எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நான் பயப்படேன்.
7. கர்த்தாவே, எழுந்தருளும்; என் தேவனே, என்னை இரட்சியும். நீர் என் பகைஞர் எல்லாரையும் தாடையிலே அடித்து, துன்மார்க்கருடைய பற்களைத் தகர்த்துப்போட்டீர்.
8. இரட்சிப்பு கர்த்தருடையது. தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின்மேல் இருப்பதாக. (சேலா)

## நாம் காண்பவைகளுக்கு அப்பாற்பட்டு கிரியை செய்யும் தேவன்!

### Our Lord Jesus Christ Can Work Beyond What You Can See!

சகோதரி ஏஞ்சலின்



**அழைப்பின் எதிரொலி** குடும்பத்தார் அனைவருக்கும், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தினாலே வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். அவருடைய கிருபையினால், 2026–ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் அடியெடுத்து வைப்பதற்கு தேவன் நம்மை உண்மையுடன் வழிநடத்தியுள்ளார். அவருடைய சமாதானம், ஆறுதல், மிகுந்த தயவு மற்றும் கிருபை ஆகியவை உங்கள் ஒவ்வொருவர் மீதும் தங்கியிருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

எபேசியர் 3:20–ம் வசனம் வேதாகமத்தில் எனக்கு எப்போதுமே மிகவும் பிடித்த வசனங்களில் ஒன்றாகும்.

> **நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு.** – எபேசியர் 3:20.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அவர் நம்முடைய எதிர்பார்ப்புகள் அனைத்தையும் மிஞ்சி நிற்கிறார். நம்மால் காணவோ அல்லது கற்பனை செய்யவோ முடியாத காரியங்களைக் கூட நிறைவேற்றும் ஆற்றல் கொண்ட வல்லமை வாய்ந்தவர். நமக்கு எதிராகச் செயல்படுவதாகத் தோன்றும் சூழ்நிலைகளைக்கூட, நமக்குச் சாதகமான

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி! கிறிஸ்தவ யூடியூப் சானல்!



போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

ஆங்கிலம், இந்தி மொழிகளில் – அதிகாலை 1.00 மணி முதல்

தமிழ், தெலுங்கு மொழிகளில் – அதிகாலை 2.00 மணி முதல்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு – காலை 8.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள்! பிறருக்கும் Share பண்ணுங்கள்!!

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)

Estd. 1969

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்; ....**
**- சங்கீதம் 30:11.**



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


HON. EDITOR-IN-CHIEF
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
Ex MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A, M.Sc(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Litt.
EDITOR, PUBLISHER & PRINTER



Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call


கர்த்தருக்குள் பிரியமானவர்களே !

நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்!

இன்றைய உலகில் நடைபெறும் யுத்தங்களும், யுத்தங்களின் செய்திகளும், விரோதங்களும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமி அதிர்ச்சிகளும், தேவ ஊழியர்களுக்கு விரோதமான உபத்திரவங்கள், கொலைகள் மற்றும் பகைகளும், கள்ளத்தீர்க்கதரிசிகளின் வருகையும், அக்கிரமமும் உலகத்தின் முடிவுக்கு அடையாளங்களாயிருக்கின்றன. இதனை, இயேசு ஆண்டவரே சொல்லியிருக்கிறார். (மத்தேயு 24:3–12).

எனவே, தருணம் கிடைப்பதற்கு ஏதுவாக,

*சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு* – 2 தீமோத்தேயு 4:2. இதனை உணராமல் இருப்பது நல்லதல்ல.

நமது எல்லா ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதிக்கிறார். இத்தனை ஊழியங்களையும் செய்ய முடிகிறதா என்ற பல கேள்விகள் பலரிடமிருந்து வருகின்றன. ஆம், தேவகிருபையால் ஒன்றும் குறையாமல் எல்லாவற்றையும் செய்து வருகிறோம். தேவன் ஒருவருக்கே மகிமையை செலுத்துகிறோம்!

தேவகிருபையால் நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** ஜூன் 4–ம் தேதி மீண்டும் வகுப்புகள் துவக்கப்பட்டன. மேலும் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளிலும்** சேப்பாக்கம் மற்றும் சந்தோஷபுரம் தமிழ் வகுப்புகள் ஜூன் 1–ம் தேதி ஆரம்பிக்கப்பட்டன. வேளச்சேரி இந்தி வகுப்புகள் ஜூலை 6–ம் தேதி ஆரம்பிக்கப் படவுள்ளன. **நெகேமியா வேதாகமக் கல்லூரி** பட்டமளிப்பு விழா ஜூலை 4–ம் தேதி நடைபெறவிருக்கிறது.

ஏராளம் பொறுப்புகள், வேலைகள் மற்றும் தேவைகள் எங்களை அழுத்திப் பிடிக்கின்றன. ஆனால், நாங்கள் எவ்வித பதற்றமும் அடையாமல் நிதானத்துடன் எங்கள் கடமைகளைச் செய்கிறோம். தேவன் வெற்றியுடன் காரியங்களை முடித்துத் தருகிறார்.

இவ்வூழியங்களை இன்றும் திறம்பட நடத்த ஊழிய தரிசனம் பெற்ற உண்மையுள்ள தேவ ஊழியர்கள் ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளில் தேர்ச்சி பெற்ற பள்ளி துணை முதல்வர்கள், ஆசிரியர்கள், அலுவலக மேலாளர்கள், காரியதரிசிகள், அலுவலகப் பணியாளர்கள், அச்சகப் பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், பணிப்பெண்கள் (சமையல்), துப்புரவாளர்கள், போதக ஊழிய அழைப்புப் பெற்றவர்கள், வாகன ஓட்டுநர்கள், காவலர்கள் (செக்யூரிட்டிப் பணியாளர்கள்) ஏராளம் பேர் தேவை.

உண்மையுள்ள ஊழியர்கள் எத்தனை பேர் வந்தாலும், அவர்களை பயன்படுத்தவும், ஆதரிக்கவும் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கிறோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்கு இவ்விஷயத்திலும் ஆதரவாய் இருக்க எங்களுக்காக ஜெபிப்பீர்களா ?

*... அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.* மத்தேயு 9:37,38.


Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ▫ BIBLECOR - Postal Courses (3 languages) ▫ YouTube Ministry ▫ Online Courses ▫ Theological Correspondence Courses (2 languages) ▫ Church Planting ▫ Nehemiah Bible Colleges ▫ Gospel Printing Press ▫ Great Commission Partners ▫ St. Paul's Matriculation School ▫ Crusades ▫ Community Development



**04–07–2026 அன்று நேகேமியா வேதாகமக் கல்லூரியில் பட்டம் பெறவிருக்கும் சில மாணவர்கள்.**

பட்டமளிப்பு விழா மற்றும் 2026–2027–ஆம் கல்வியாண்டு தொடர்பான விவரங்கள் குறித்து விவாதிக்க, 16–05–2026 அன்று **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** விரிவுரையாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

வெகுவேகமாகவும், உண்மையுடனும், கருத்துடனும், தேவபயத்துடனும், ஊழியம் செய்கிறோம். எங்களுடன் கைகோர்த்து நின்று ஜெபிக்கவும், செயல்படவும், உங்களைக் கனிவுடன் வேண்டுகிறோம்.

உங்கள் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கிறோம்.

தேவ கிருபை உங்களோடு இருப்பதாக, ஆமென்!

**கிறிஸ்து இயேசுவுக்குள்**
**உங்கள் சகோதரரான,**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆசீர்வாதங்களாக மாற்றும் வல்லமையுடையவர். கடந்த சில மாதங்களில் நீங்கள் எத்தகைய அனுபவங்களைக் கடந்து வந்திருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது; ஆனால், உங்களுக்குத் தூக்கமில்லாத இரவுகளை ஏற்படுத்திய காரியங்கள் உட்பட அனைத்து காரியங்களையும் நன்மைக்கேதுவாக மாற்றும் வல்லமை இயேசு கிறிஸ்துவிடம் இருக்கிறது என்பதை நான் உங்களுக்கு உறுதியாக கூற விரும்புகிறேன்:

**சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: கொஞ்சக்காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன்** என்று ஆகாய் 2:6–ல் வாசிக்கிறோம்.

ஆம்! தேவன் நமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, வானத்தையும் பூமியையும் அசைக்க வல்லவர். இதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர் எனக்கும், உங்களுக்கும் சாதகமாக எல்லாவற்றையும் அசைக்க வல்லவர்!



**நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன்**

பிரியமான சகோதர, சகோதரிகளே! நம் வாழ்வில் தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதிலிருந்து சாத்தான் பெரும்பாலும் நம்மை திசை திருப்புகிறான். அவன் நம் கவனத்தைச் சிதறடித்து, முக்கியத்துவமற்ற காரியங்களின்பால் நம் கவனத்தைத் திருப்புகிறான். இதை அவன் எவ்வாறு செய்கிறான்? உட்புற மற்றும் வெளிப்புற சிக்கல்களை ஏற்படுத்துவதன் மூலமே அவன் இதைச் செய்கிறான்.



**தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதிலிருந்து சாத்தான் பெரும்பாலும் நம்மை திசை திருப்புகிறான்**

வெளியே உள்ள போராட்டங்களை எதிர்கொள்ள தேவன் நம்மை அழைக்கும் போது, எதிரி நம் குடும்பங்களுக்குள்ளும் திருச்சபைக்குள்ளும் குழப்பங்களை உருவாக்குகிறான். அதனால் நாம் கவனத்தை இழக்கிறோம். வெளியே உள்ள தீமையை அணைப்பதற்குப் பதிலாக, நம் சொந்த வீடுகளுக்குள் இருக்கும் தீயுடன் நாம் போராடுவதைக் காண்கிறோம். உண்மையான எதிரி பதுங்கியிருக்கும் சிங்கத்தைப் போல வெளியே காத்திருக்கையில், அவன் நம் சொந்தக் குடும்ப உறுப்பினர்களையோ அல்லது உடன் விசுவாசிகளையோ எதிரிகளாகக் காணும்படி நம்மை வஞ்சிக்கிறான்.

எஸ்றா புத்தகமும், ஆகாய் புத்தகமும், இஸ்ரவேலர்கள் தங்கள் 70 வருட சிறைவாசத்திற்குப் பிறகு, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக உள்ளும், புறமும் உள்ள சவால்களை எவ்வாறு கடக்க வேண்டியிருந்தது என்பதை விளக்குகின்றன. இந்தப் போராட்டங்களின் மூலம், அவர்கள் எதிர்பார்த்ததைவிட மிக அதிகமாக தேவன் செயல்படுவதை அவர்கள் கண்டனர்.

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

**வெளிப்புறச் சவால்கள் (எஸ்றா அதிகாரம் 5)**



**ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணியின்போது மக்கள் கடும் வெளிப்புற அழுத்தங்களை எதிர்கொண்டனர்**

ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணியின்போது மக்கள் கடும் வெளிப்புற அழுத்தங்களை எதிர்கொண்டனர்:

- தொடர்ச்சியான புகார்களும் எதிர்ப்புகளும்
- தங்கள் அதிகாரவரம்பு குறித்து அண்டை நாட்டு அதிகாரிகளிடமிருந்து எழுந்த ஊடுருவும் வகையிலான விசாரணைகள்
- தரியு இராஜா, சைரஸ் இராஜாவின் கட்டளையை விசாரித்ததன் மூலம் ஏற்பட்ட அரசியல் ரீதியான கண்காணிப்பு



**தரியு இராஜா, சைரஸ் இராஜாவின் கட்டளையை விசாரித்தல்**

**உட்புறச் சவால்கள் (ஆகாய்)**

அதே வேளையில், அவர்கள் உள்மனப் போராட்டங்களையும் எதிர் கொண்டனர்:

- முந்தைய ஆலயத்துடன் இடைவிடாமல் ஒப்பிட்டுப் பார்த்தல்
- இதன் விளைவாக ஏற்பட்ட ஏமாற்றம், அச்சம் மற்றும் மனச்சோர்வு

இது உங்களுக்கும் பரிச்சயமானதாகத் தோன்றுகிறதா ?

- நாம் கடவுளை நோக்கி ஒரு படி நெருங்கிச் செல்லும்போது
- அவருக்குப் பிரியமான ஒரு வாழ்க்கையை வாழ நாம் தீர்மானிக்கும்போது
- நம் வாழ்வில் அவர் விடுத்துள்ள அழைப்பை நிறைவேற்ற நாம் முயலும்போது

நாம் அனைவரும் இதேபோன்ற உள்மனப் போராட்டங்களையும், வெளிப்புற அழுத்தங்களையும் எதிர்கொள்கிறோமல்லவா ?

இத்தகைய போராட்டங்களின் மூலம் ஏற்படும் கவனத்தை திசை திருப்புதல்களின் மத்தியிலும், நம்மில் எத்தனை பேர் உறுதியுடன் தொடர்ந்து முன்னோக்கிச் சென்றிருக்கிறோம் ? மேலும், நம்மில் எத்தனை பேர் தேவன் நமக்கு அளித்த கனவுகளையும், அழைப்பையும் கைவிட்டு விட்டுள்ளோம் ?

நம் வாழ்வில் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, முழு உலகத்தையே அசைக்க வல்ல ஆண்டவரை நாம் சேவிக்கிறோம் என்பதை இன்று தேவன் நமக்கு நினைவூட்டுகிறார். ஆனால், நாம் அதற்கு விருப்பமாயிருக்கிறோமா என்பதுதான் இப்போது எழும் கேள்வியாகும்.

## 1. உட்புறத்தில் எதிர்கொண்ட சவால்கள்!

இஸ்ரவேலர்கள் ஆலயத்தை மீண்டும் கட்டத் தொடங்கியபோது, சுய ஒப்பீட்டு மனப்பான்மையுடன் போராடினார்கள். வயது, பாலினம், அல்லது தேசியம் ஆகிய பேதமின்றி, நாம் அனைவரும் இதை எதிர்கொள்கிறோம். பெரும்பாலும் நாம் அதை உணர்வதுகூட இல்லை.

நமது வீடு, வாகனங்கள், வேலைகள், சம்பளங்கள், வாழ்க்கைத் துணை, கல்வி, பிள்ளைகள். ஏன், நமது ஊழியம் மற்றும் அழைப்பைக்கூட நம்மையறியாமலேயே நமது வாழ்க்கையை மற்றவர்களுடன் ஒப்பிடுகிறோம். அவ்வாறு செய்வதன் மூலம், தேவன் தம்முடைய தெய்வீகத் திட்டத்தின் ஒரு பகுதியாக நம் ஒவ்வொருவரையும் எவ்வளவு தனித்துவமாகப் படைத்திருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளத் தவறுகிறோம்.



**நமது வாழ்க்கையை மற்றவர்களுடன் ஒப்பிடுகிறோம்.**

வெளியேயுள்ள எதிரிகளை எதிர்கொள்வதற்கு முன்பு, இஸ்ரவேலர்கள் தங்களுக்குள்ளே இருந்த இந்த அகப்போராட்டத்தைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவர்கள் புதிய ஆலயத்தை முந்தைய ஆலயத்துடன் ஒப்பிட்டு, தங்கள் உழைப்பையும், தேவன் ஏற்கனவே தங்களுக்காகச் செய்தவற்றையும் குறைத்து மதிப்பிட்டனர். இந்த அகரீதியான மனோநிலை அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, சைரஸ் மற்றும் தரியு போன்ற புறஜாதி இராஜாக்களிடம் அவர்களுக்கு தயவை பெற்றுத் தந்த தேவனுடைய அற்புதமான கிருபைகளை மறக்கடிக்கச் செய்தது; நன்றி மறக்கச் செய்தது. நாம் ஒப்பிடும்போது, நன்றிகெட்டவர்களாகி விடுகிறோம். இது மனச்சோர்வு, ஏமாற்றம் மற்றும் மன உளைச்சலுக்கு வழிவகுக்கிறது.



**இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்டவர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார் ?**

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (I தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2026 ஜூலை 19 முதல் 2026 ஆகஸ்ட் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூலை 19 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஜூலை 20 ⇨ நமது தலைமைச் சபைக்கு புது உத்வேகமுள்ள விசுவாசிகளை கொடுத்து ஆசீர்வதித்ததற்காக…

ஜூலை 21 ⇨ **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** முழுநேர மற்றும் மாலைநேரக் கல்விகளுக்கான புதிய மாணவர்களை கொடுத்ததற்காக…

ஜூலை 22 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஜூலை 23 ⇨ சந்திக்கப்படாத மக்களை சுவிசேஷம் சென்றடையச் செய்த கிருபைக்காக…

ஜூலை 24 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக…

ஜூலை 25 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் ஆசீர்வதித்து வருகிறதற்காக….

ஜூலை 26 ⇨ ஞாயிறுதோறும் பாலாஜி நகர், சந்தோஷபுரம் மற்றும் வேளச்சேரியில் நிகழ்த்தப்படும் சபை ஆராதனைகளுக்கு வரும் புது விசுவாசிகளுக்காக…

ஜூலை 27 ⇨ சந்திக்கப்படாத மக்களை சென்றடையும் **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் 5 நிமிட செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஜூலை 28 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும், அதன் திறமையான ஊழியர்களுக்காகவும்…

ஜூலை 29 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல் வழி வேதாகமக்கல்வி** ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஜூலை 30 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும் மற்றும் அவர்களது சமூகத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காகவும்…

ஜூலை 31 ⇨ உலக நாடுகளைப் பாதுகாத்து வருவதற்காக …

ஆகஸ்ட் 01 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வருவதற்காக …

ஆகஸ்ட் 02 ⇨ நமது ஊழியங்களை ஜெபங்களினாலும், பொருளாதாரங்களினாலும் ஆதரிப்பவர்களை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக…

ஆகஸ்ட் 03 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப் பட்டதற்காக…

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஆகஸ்ட் 04 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி…

ஆகஸ்ட் 05 ⇨ அனைத்து சபைகளின் ஒற்றுமைக்காக…

ஆகஸ்ட் 06 ⇨ உலகிலுள்ள நாடுகள் அனைத்திற்குள்ளாக சமரசம் நிலவிட வேண்டி …

ஆகஸ்ட் 07 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட அர்ப்பணிப்புடன்…

ஆகஸ்ட் 08 ⇨ உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்காக…

ஆகஸ்ட் 09 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் நற்பணித் திட்டங்களுக்காக …

ஆகஸ்ட் 10 ⇨ இன்று 58–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நமது ஊழியங்களுக்காக…

ஆகஸ்ட் 11 ⇨ ஊழிய பணித்தளங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காக ..

ஆகஸ்ட் 12 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட வேண்டி…

ஆகஸ்ட் 13 ⇨ ரஷ்யாவிற்கும், உக்ரேனுக்கும் இடையே நடைபெறும் போரில் முடிவு ஏற்பட்டு அங்கே அமைதியும், சமாதானமும், மகிழ்ச்சியும் நிலவ வேண்டி…

ஆகஸ்ட் 14 ⇨ நமது ஊடக ஊழியங்களின் மூலம் அதிகாலை 1.00 & 2.00 மணியளவில் யூடியூபில் ஒளிப் பரப்பாகும் 5 நிமிட தேவசெய்திகளுக்காக…

ஆகஸ்ட் 15 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் புதிய பெலனுக்காகவும் வேண்டி …

ஆகஸ்ட் 16 ⇨ கர்த்தர் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் குடும்பங்களில் சமாதான–பின்மையை ஏற்படுத்தும் சாத்தானின் தந்திர நடவடிக்கைகளை நிர்மூலமாக்க வேண்டி…

ஆகஸ்ட் 17 ⇨ வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகள் மூலமாக ஆண்டவரால் தொடப்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்து சபைக்கு தொடர்ந்து வர வேண்டி …

ஆகஸ்ட் 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி…

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**இந்த ஆலயத்தின் முந்தின மகிமையைக் கண்டவர்களில் உங்களுக்குள்ளே மீந்திருக்கிறவர்கள் யார்? இப்பொழுது இது உங்களுக்கு எப்படிக் காண்கிறது? அதற்கு இது உங்கள் பார்வையில் ஒன்றுமில்லாதது போல் காண்கிறதல்லவா?** ஆகாய் 2:3.

- புதிய ஆலயம் பார்ப்பதற்குச் சிறியதாகத் தோன்றியது
- வளங்கள் குறைவாகவே இருந்தன
- சாலொமோனின் ஆலயத்திற்குரிய பிரம்மாண்டம், அவர்களின் தற்போதைய கட்டுமானப் பணியை மங்கச் செய்தது
- ஒரு காலத்தில் பாழடைந்து கிடந்த ஆலயத்தை மக்கள் இப்போது மீண்டும் கட்டி எழுப்பினர்.

*அவர்கள் இரண்டு விதமான குரல்களைக் கேட்டதாக வேதாகமம் கூறுகிறது:*

1. முந்தின ஆலயத்தைக் கண்டவர்களின் குரல் – பல ஆண்டுகளுக்கு முன்பு தாங்கள் கண்டுகளித்த மகிமையோடு, இப்போதுள்ள ஆலயத்தை ஒப்பிட்டுப் பார்த்தபோது எழுந்த துயரமும், வேதனையுமான ஒரு அழுகுரல் அது.
2. தற்போதைய தலைமுறையினரின் குரல் – தங்களது சிறப்பான சாதனையை முன்னிட்டு அவர்கள் மகிழ்ச்சியால் எழுப்பிய ஆரவாரக் குரல் அது. எண்ணிக்கையின் அடிப்படையில் பிந்தையவர்களின் குரல் அதிகமாக இருந்திருக்கலாம். ஆயினும், அந்தத் துயரத்தின் குரலே மிகத் தெளிவாகவும், ஓங்கியும் ஒலித்தது.

ஆம், அந்தச் சோர்வின் குரலே அதிக சத்தத்துடன் ஒலித்தது.

ஆனால், எஸ்றா புத்தகம் 6–ஆம் அதிகாரம் ஒரு ஆழமான உண்மையை வெளிப்படுத்துகிறது: – முந்தைய ஆலயத்தில் சாலோமோனின் செல்வம் இருந்தது; ஆனால், இந்த ஆலயத்திலோ, தேவனுடைய மகத்தான நோக்கம் அமைந்திருந்தது.

- எதிர்பாராதவிதமாக, புறஜாதி இராஜாக்களிடமிருந்து உதவிகள் (வளங்கள்) வந்து சேர்ந்தன
- தேவனுடைய அதிகாரத்தின்கீழ் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றன
- இராஜாவின் வாயிலாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது
- ஆராதனை முறை மீண்டும் நிலை நாட்டப்பட்டது
- அமைதியும், நிலைத்தன்மையும் மீண்டும் திரும்பின.

**முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: . . .** ஆகாய் 2:9.



**முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்**

இந்தப் பெரிதாயிருக்கிற மகிமையானது, அதன் அளவையோ அல்லது பொன்னையோ பற்றியது அல்ல, மாறாக, அது பின்வருவனவற்றைப் பற்றியதாக இருந்தது.

- இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தேவனுடைய உண்மைத்தன்மை
- தாழ்மையும் கீழ்ப்படிதலும் கொண்ட மக்களுக்கு மத்தியில் அவரது பிரசன்னம்
- எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு கிறிஸ்துதாமே பிற்காலத்தில் இந்த ஆலயத்தில் வருகை தரவிருக்கிறார் என்னும் உண்மை.

ஒப்பீடு செய்தல் என்னும் குணம், தேவனுடைய அற்புதமான கிரியைகளைப் போற்றிப் பாராட்டுவதிலிருந்து அவர்களைத் தடுத்துவிட்டது. – ஆனால், தேவன், தமது இரக்கத்தினால், அவர்களைத் திடப்படுத்த சரியாக நேரத்தில் ஊக்கமளித்தார்.

திடன் கொள்ளுங்கள்!

தேவன் தீர்க்கதரிசியின் வாயிலாக ஆகாய் 2:4–இல், அவர்களை திடப்படுத்தினார்.

**ஆனாலும் செருபாபேலே, நீ திடன் கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனே, நீ திடன் கொள்; தேசத்தின் எல்லா ஜனங்களே, நீங்கள் திடன் கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்களுடனே இருக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

**நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நான் உங்களோடே உடன்படிக்கை பண்ணின வார்த்தையின்படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்.** ஆகாய் 2:5.

மூன்று முறை, தேவன் திடன் கொள்ளுமாறு கட்டளையிடுகிறார்; தமது பிரசன்னம் அவர்களோடு இருப்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்துகிறார்.

திடமாயிரு, நீ எத்தகைய சூழ்நிலையைக் கடந்து சென்று கொண்டிருந்தாலும், நான் உன்னோடு

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
Diploma in Theology & Bachelor of Theology
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org / இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
17. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
20. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
21. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
22. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
23. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
24. இந்தி ஆராதனை – புதன் இரவு 7.00 மணி
25. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
26. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
27. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
28. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
29. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
30. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
31. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
32. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
33. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
34. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
35. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
36. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## இத்தகைய உறுதியான தூண்கள் நமது சபைகளுக்குத் தேவை!

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை ; . . . - வெளிப்படுத்தின விசேஷம் 3:12.



என்னுடைய வாலிப நாட்களில் சென்னையிலுள்ள அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் ஆழமாக நாட்டப்பட்டிருந்தேன். அந்நாட்களில் போதகர் ஜி. சுந்தரம் ஐயா அவர்கள் இச்சபையை நடத்தி வந்தார். தனது தனிப்பட்ட மாதிரியான வாழ்க்கையின் மூலமாகவும், போதிப்பதினாலும் பயிற்றுவிப்பதினாலும் ஆயிரக்கணக்கான ஊழியர்களை இவர் உருவாக்கியுள்ளார். இவர் வல்லமையான ஆவிக்குரிய தலைவர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் யார் யார் சபைக்கு வந்தனர், யார் யார் வரவில்லை என்பதை துல்லியமாக அறிந்துகொள்ளும் அபாரமான ஞாபக சக்தியை உடையவர்.

போதகர் அவர்களிடம் குறிப்பாக மூன்று சிறந்த மனிதர்கள் பணியாற்றி வந்தனர். மாநில அரசில் ஊழியராக இருந்த மறைந்த சகோதரர் T. செல்வராஜ், ரயில்வேத் துறையைச் சார்ந்த மறைந்த சகோதரர் விக்டர் சுவாமிதாஸ் மற்றும் சென்னை கார்லி பள்ளியில்



பணியாற்றிய மறைந்த சகோ. L.M. ஜெயமோகன் என்ற ஜெயக்குமார் ஆகியவர்களே.

சில இளைஞர்களைப்போலவே, நானும் ஆரம்ப காலத்தில் சில வேளைகளில் எனது அரசு பணி காரணமாக ஞாயிறு ஆராதனைக்குச் செல்வதில்லை. அப்படிப்பட்ட சமயங்களில் காவல்துறை அதிகாரிகள்போல் நான் மேற்குறிப்பிட்ட மூன்று சகோதரர்களும் வாரநாட்களில் எனது பணி இடம் அல்லது சிற்றுண்டிசாலையில் என்னைத் தேடி வந்துவிடுவர். சபை ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுவதில் உள்ள ஆசீர்வாதங்கள் குறித்தும், சபையின் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுவதின் அவசியம் குறித்தும் ஆலோசனை கூறுவார்கள். தனது பணத்தையும் நேரத்தையும் பாராது இச்சகோதரர்கள் என்னை சந்தித்து ஆவிக்குரிய பாதையில் தவறாது செல்ல உதவினார்கள்.

இவர்களது கடினமாக உழைப்பு எனது ஆவிக்குரிய ஜீவியத்தில் முக்கிய பங்கு ஆற்றியது என்பதை என்னால் குறிப்பிட முடியும். என்னுடைய ஜீவியத்தின் சில பகுதிகளில் இவர்கள் என்னிடம் கடினமாக நடந்து கொண்டதும் உண்டு. என்னைப் போன்ற சீடர்களை உருவாக்குவதில் இவர்கள் அன்பு நிறைந்தவர்களாகவும் பொறுமையுள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள்.

இவர்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கத் தொடங்கிய அந்நாட்களில், தகப்பனைப்போல் அன்பு பாராட்டி, நமது சபைகளில் வாராவாரம் செய்தி கொடுத்தும், சிறப்புக் கூட்டங்கள் நடத்தியும் உதவி செய்தனர். இந்தச் சகோதரர்கள் என்னுடைய ஜீவியத்தில் மட்டுமல்ல, ஆயிரமாயிரம் சகோதர சகோதரிகள் ஜீவியங்களிலும் நற்பணியாற்றியுள்ளார்கள் என்பதை உறுதியாக என்னால் கூறமுடியும். உருவாக்கப்பட்ட சகோதர, சகோதரிகள் அந்தந்த சபைகளுக்கும் சபைப் போதகர்களுக்கும் உத்தரவாதமுள்ளவர்களாக உள்ளனர். இந்த மூன்று சகோதரர்களும் தங்களுக்காக அல்ல, கர்த்தருக்காகவே உழைத்தனர். கர்த்தர் இவர்களையும் இவர்கள் சந்ததிகளையும் ஆசீர்வதிப்பாராக!



இத்தகைய தன்னலமற்ற அர்ப்பணிக்கப்பட்ட சகோதர, சகோதரிகளை கர்த்தர் இந்நாட்களில் சபைகளில் எழுப்ப வேண்டும் என்பதுதான் என் ஜெபமாயிருக்கிறது.

*****************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறேன் என்று தேவன் இன்று உங்களுக்கு உரைக்கிறார்.

- இதுவே யோசுவாவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தமாகும். ... **பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.** யோசுவா 1:9.
- இதே வாக்குத்தத்தம் ஏசாயா 41:10–லும் அளிக்கப்பட்டுள்ளது. **நீ பயப்படாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்; ... என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**



**என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

நாம் மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சோர்வும், பயமும் நம்மைப் பின்தொடரும். ஆகையால், நம்மை மற்றவர்களுடன் ஒப்பிடுவதை நாம் நிறுத்த வேண்டும். நமக்கு ஒரு பரலோக அழைப்பு உண்டு.

## 2. வெளிப்புறத்தில் எதிர்கொண்ட சவால்கள்!

தங்களுக்குள்ளே ஏற்பட்ட மனச் சிக்கல்களைக் கையாண்ட பிறகு, இஸ்ரவேல் மக்கள் தங்கள் பிராந்திய அதிகாரிகளிடமிருந்து வெளிப்புற எதிர்ப்பைச் சந்தித்தனர்.

'இந்த ஆலயத்தைக் கட்டவும், இந்தச் சுவரை முடிக்கவும் உங்களுக்கு உத்தரவிட்டது யார் ?'

எதிர்ப்பு என்பது தேவன் நம்மைக் கைவிட்டார் என்று அர்த்தமல்ல. தேவன் எப்போது நமக்காகச் செயல்படுகிறார் என்பதையும், அவருடைய சித்தத்திற்கு முரணானது எது என்பதையும் கண்டறிய நமக்கு ஆவிக்குரிய பகுத்தறிவு தேவை. நாம் அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது, நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு எதிர்ப்பையும் அவருடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காகத் தேவன் பயன்படுத்த முடியும்.

- தாவீது கோலியாத்தை எதிர்கொண்டார்
- நெகேமியா சன்பல்லாத்தையும், தொபியாவையும் எதிர்கொண்டார்
- பவுல் யூத எதிர்ப்பாளர்களிடமிருந்து துன்புறுத்தலை எதிர்கொண்டார்
- ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் எல்லா இடங்களிலும் எதிர்ப்பைச் சந்தித்தனர்
- ஆயினும், இச்சூழ்நிலைகள் அனைத்திலும் தேவனுடைய நாமம் மகிமைப்படுத்தப்பட்டது.

அதேபோல, இந்த அதிகாரத்திலும் எதிர்ப்புகள் எழுவதைக் காண்கிறோம். மக்கள் இடிபாடுகளிலிருந்து ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பத் தங்கள் வேலைகள், குடும்பங்கள் மற்றும் வசதியான வாழ்க்கையை விட்டு வந்திருந்தனர். அவர்கள் பெரும் தியாகங்களைச் செய்திருந்தனர். ஆயினும், அவர்கள் பாராட்டுக்குப் பதிலாக விமர்சனங்களையே சந்தித்தனர். ஊக்கமளிக்கும் வார்த்தைகளுக்குப் பதிலாகப் புகார்க் கடிதங்கள் வந்தன. மேலும் அவர்களின் பணி தொடர்ந்து சவாலுக்கு உட்படுத்தப்பட்டது.

மக்களிடமிருந்து அங்கீகாரத்தை எதிர்பார்க்காதீர்கள்; தேவனே நமக்கு வெகுமதி அளிப்பவர். அவருடைய சித்தத்தை உண்மையுடன் தொடர்ந்து செய்யுங்கள்.

அன்பான நண்பர்களே, நீங்கள் எதிர்ப்பைச் சந்திக்கும்போது பயப்பட வேண்டாம். 'யூதர்களின் மூப்பர்கள் மீது அவர்களுடைய தேவனுடைய கண் நோக்கமாயிருந்தது.' இன்றும் நம் ஆண்டவரின் கண்கள் நம்மீது உள்ளன. இது உங்களுக்கான வார்த்தையாக இருக்கலாம்: உங்களுக்கு எதிரான ஆயுதங்கள் உருவாக்கப்படலாம்; ஆனால், அவை வாய்க்காது. குற்றச்சாட்டுகள் எழலாம்; ஆனால், அவை நிலைநிற்காது.

தேவன் என்ன செய்தார் ?

அவர் யுத்தம் செய்யும்போது, **வானத்தையும், பூமியையும் அதிரப் பண்ணுவார்.** (ஆகாய் 2:21). பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் நமக்குச் சாதகமாகச் செயல்படும்படி அவர் செய்வார்.

எல்லாம் அவர்களுக்கு எதிராக இருப்பதாகத் தோன்றிய வேளையில், எஸ்றா 6:12–இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். ... **தரியுவாகிய நாம் இந்தக் கட்டளையைக் கொடுத்தோம்; இதின்படி ஜாக்கிரதையாய்ச் செய்யப்படக்கடவது...**

அவர்களுக்கு எதிராகப் புகார்களைப் பெற்றுக் கொண்ட அதே இராஜா, இப்போது அந்த வேலைக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் அது முழுமையாக முடிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டு ஒரு ஆணை பிறப்பித்தான்.

- **தேவனுடைய ஆலயத்தின் வேலையை அவர்கள் செய்யட்டும்....** என்று எஸ்றா 6:7–ல் அவர் மறுசீரமைப்புப் பணியை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தினார்
- **அப்பணிக்கான முழுச்செலவையும் இராஜ்யத்தின் கருவூலத்திலிருந்தே மேற்கொள்ளுமாறு அவர் உத்தரவிட்டார்.** (எஸ்றா 6:8)
- **ஆராதனைக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் தினமும் வழங்கப்படுவதை அவர் உறுதி செய்தார்.** (எஸ்றா 6:9–10)
- **அப்பணியைத் தடுக்க முயலும் எவருக்கும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என்று அவர் எச்சரித்தார்.** (எஸ்றா 6:11–12).

தரியு இராஜாவின் செயல்பாடு வெறும் ஆதரவாக மட்டுமல்லாமல், பாதுகாப்பளிப்பதாகவும் தாராள மனப்பான்மை கொண்டதாகவும் இருந்தது.

எதிர்ப்பாகத் தொடங்கிய ஒன்று, இறுதியில் மக்கள் எதிர்பார்த்ததைவிடவும் அதிகமான மறுசீரமைப்புப் பணியை வலுப்படுத்தியது.

தேவன் தம்முடைய நோக்கத்தை அறிவிக்கும்போது (ஆகாய் 2), அதை நிறைவேற்றுவதற்காக மனித அமைப்புகளை அவர் மாற்றி அமைக்கிறார். (எஸ்றா 6)

இந்த மாதத்தில், உங்களுக்கு எதிராகப் பேசப்பட்ட ஒவ்வொரு எதிர்மறையான வார்த்தையையும் தேவன் முறியடிக்கவும், தீமைக்காகத் திட்டமிடப்பட்ட அனைத்தையும் உங்களுக்குச் சாதகமாக மாற்றவும் நான் ஜெபிக்கிறேன். தம் மக்களின் வாழ்வில் தம் நோக்கத்தை நிறைவேற்ற முழு அமைப்புகளையும் அவரால் மாற்றி அமைக்க முடிந்தால், இன்று உங்கள் வாழ்விலும் நிச்சயமாக அவரால் அதைச் செய்ய முடியும். அவருடைய கண்கள் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றன.

நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவர்மீது நம்பிக்கை வைப்பது மட்டுமே. சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய அன்பு அளவிட முடியாதது. நாம் வெற்றியுடன் வாழ்வதற்காகவே இயேசு கிறிஸ்து மரித்தார்.

ஆகவே, படைத்தவர்மீது உங்கள் நம்பிக்கையை வையுங்கள்.

*************

### அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.* – **ஆசிரியர்**

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**☆ வருட சந்தா ரூ. 100/– ☆ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 29th JUNE 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**